# சுந்தரம் ஃபாஸனர்ஸ் லிமிடெட்
# Sundram Fasteners Limited

CIN : L35999TN1962PLC004943
பதிவு பெற்ற அலுவலகம் : 98-A, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை 600 004.
Tel: +91 - 44 - 28478500 | Fax: 91 - 44 - 28478510 | Email: investorshelpdesk@sfl.co.in | Website: www.sundram.com

## 52வது வருடாந்திர பொதுக்கூட்டம், மின்னணு வாக்குப்பதிவு மற்றும் பங்கு மாற்றுப் புத்தகங்கள் மூடப்படுவது பற்றிய அறிவிப்பு

கம்பெனியின் பங்குதாரர்களின் 52வது வருடாந்திர பொதுக்கூட்டம் 21 **ஆகஸ்ட் 2015, வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு தி மியூசிக் அகாடமி – டி டி கிருஷ்ணமாச்சாரி ஆடிட்டோரியம் [மெயின் ஹால்], புதிய எண் 168, டி டி கே ரோடு, ராயப்பேட்டை, சென்னை** – 600 014 என்ற முகவரியில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மின்னஞ்சல் முகவரியை கம்பெனியுடனோ அல்லது டெபாசிட்டரியுடனோ பதிவு செய்த அங்கத்தினர்களுக்கு, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை, வருகை பதிவேடு மற்றும் பதிலி படிவங்கள் ஆகியவை, [காகித வடிவில் பெற விரும்பும் அங்கத்தினர்களை தவிர மற்ற அங்கத்தினர்களுக்கு] மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. மேற்கண்டவற்றை காகித வடிவில், அனுமதிக்கப்பட்ட முறையில், தங்கள் மின்னஞ்சல் முகவரியை கம்பெனியுடனோ அல்லது டெபாசிட்டரியுடனோ பதிவு செய்யாத அனைத்து அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. 10 ஜூலை, 2015 வெள்ளிக்கிழமை வர்த்தக நேர முடிவில் டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர் பதிவேடு மற்றும் பயன்பெறும் உரிமையாளர்கள் பதிவேடு ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள அனைத்து அங்கத்தினர்களுக்கும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

52வது வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிக்கை மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.sundram.com-ல் வெளியிடப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை கிடைக்கப் பெறாத அங்கத்தினர்கள் கம்பெனியின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது மேற்கண்ட மின்னஞ்சல் முகவரி அல்லது கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு தலைமை நிதி அதிகாரி மற்றும் கம்பெனி செயலாளர் அவர்களிடம் எழுத்து மூலம் கோரி பெறலாம். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் வர்த்தகங்கள் பற்றிய விவரங்களை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாள் உட்பட அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் [மேலாண்மை மற்றும் நிர்வாகம்] விதிகள் 2014, விதி 20 மற்றும் லிஸ்டிங் ஒப்பந்தம் பகுதி, 35பி ஆகியவற்றின்படி, கடைசி நாளன்று, காகித வடிவில் மற்றும் மின்வடிவில் பங்குகள் வைத்திருக்கும் அங்கத்தினர்களுக்கு வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள ஒவ்வொரு வகைகளின் மீதும் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் அல்லாத, தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்க கம்பெனி நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட் மூலம் வசதியை ஏற்படுத்தி உள்ளது. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகங்களை மின்னணு வாக்குப்பதிவு மூலம் நிறைவேற்றப்படலாம்.

அங்கத்தினர்கள் கீழ்க்கண்ட விவரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| வருடாந்திர பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் வருடாந்திர அறிக்கை அனுப்பியது நிறைவு செய்த நாள் | 23 ஜூலை, 2015 வியாழக்கிழமை |
| மின்னணு மூலம் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்படிவம் மூலம் வாக்களிக்க அங்கத்தினர்களின் வாக்களிக்கும் தகுதியை நிர்ணயம் செய்ய கடைசி நாள் | 14 ஆகஸ்ட், 2015 வெள்ளிக்கிழமை |
| தொலைவில் இருந்து மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும் நாள் மற்றும் நேரம் | 18 ஆகஸ்ட், 2015, செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| தொலைவில் இருந்து மின்னணு வாக்குப்பதிவு முடியும் நாள் மற்றும் நேரம் | 20 ஆகஸ்ட், 2015, வியாழக்கிழமை மாலை 5.00 மணி |
| தொலைவில் இருந்து மின்னணு வாக்குப்பதிவு நிறுத்தப்படும் நேரம் | 20 ஆகஸ்ட், 2015, வியாழக்கிழமை மாலை 5.00 மணி |

எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டபின் ஆனால் கடைசி நாளான **ஆகஸ்ட் 14, 2015** தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால் sriram@integratedindia.in மற்றும் evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தங்கள் ஃபோலியோ எண் / டிபிஐ டி மற்றும் வாடிக்கையாளர் ஐடி ஆகியவற்றை குறிப்பிட்டு விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாளச் சொல் (Login ID) மற்றும் கடவுட்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் தொலைவில் இருந்து மின்னணு மூலம் வாக்களிக்க NSDL–உடன் ஏற்கனவே பதிவு செய்திருந்தால் தங்கள் தற்போதைய அடையாளச் சொல் (Login ID) மற்றும் கடவுட்சொல் (Password) ஆகியவற்றை உபயோகித்து வாக்களிக்கலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்குப்படிவம் மூலம் வாக்களிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தில் பங்கு பெறும் அங்கத்தினர்கள் தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்கா விட்டால், அவர்கள் வாக்குப்படிவம் மூலம் தங்கள் வாக்குகளை பதிவு செய்யலாம்.

நிறுவனம், திரு.கே.ஸ்ரீராம், பயிற்சியில் உள்ள கம்பெனி செயலாளர், அவர்களை தொலைவில் இருந்து மின்னணு மூலம் வாக்களிக்கும் முறையை சரிபார்ப்பவராக நியமனம் செய்துள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடப்பதற்குமுன் தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம். ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.

கடைசி நாளான **ஆகஸ்ட் 14, 2015** அன்று உறுப்பினர் பதிவேடு மற்றும் டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன்பெறும் உரிமையாளர்கள் பட்டியல் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள நபர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னணு முறையில் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்படிவம் மூலம் வாக்களிக்கும் உரிமை பெற்றவர் ஆவர்.

மின்னணு வாக்குப்பதிவு மீது ஏதேனும் சந்தேகம் இருந்தால், உறுப்பினர்களுக்காக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய குறிப்பேடுகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது திரு. ராஜீவ் ரஞ்சன், உதவி மேலாளர், NSDL, அவர்களை 4வது மாடி, ஏ விங், டிரேட் வோல்ட், கமலா மில்ஸ் காம்பவுண்டு, சேனாபதி பபத் மால், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியில் மின்னஞ்சல் : rajivr@nsdl.co.in, இலசவ தொலைபேசி எண் : 1800–222–990, தொலைபேசி எண் : 91–22–2499 4200 / 91–22–2499 4738 ஆகியவற்றில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013, 91ஆம் பிரிவின் கீழ், அங்கத்தினர்கள் பதிவேடும் பங்கு மாற்றுப் புத்தகங்களும் ஆகஸ்ட் 13, 2015 வியாழக்கிழமை முதல் ஆகஸ்ட் 21, 2015 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட) வருடாந்திர பொதுக்கூட்டத்திற்காக மூடியிருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சுந்தரம் ஃபாஸனர்ஸ் லிமிடெட்டுக்காக

சென்னை
**V G** ஜெகன்னாதன்

24 ஜூலை, 2015
தலைமை நிதி அதிகாரி மற்றும் செயலாளர்

**குறிப்பு : கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமையுடைய உறுப்பினர், வேறு ஒருவரையோ அல்லது அதற்கு மேற்பட்ட நபரையோ பதிலியாக அனுப்பி வாக்கு அளிக்கலாம். அப்படி அனுப்பப்படுபவர் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு நபர் 50 உறுப்பினர்களுக்கு மேல் பதிலியாக செயல்படலாம் மற்றும் அந்த நபர் கம்பெனியின் மொத்த வாக்கு பங்கு மூலதனத்தில் 10% மிகாமல் இருக்க வேண்டும். பதிலியை நியமனம் செய்வதற்கான படிவம் மற்றும் சட்டபூர்வமான அதிகார பத்திரம் அல்லது இதர அதிகார பத்திரம், ஏதேனுமிருந்தால், கையெழுத்திடப்பட்டு அல்லது சட்டபூர்வ அதிகாரியால் அல்லது இதர அதிகாரியால் சான்றிதழ் அளிக்கப்பட்டு கூட்டம் துவங்குவதற்கு 48 மணி நேரத்துக்கு முன் கம்பெனி வசம் அல்லது கம்பெனியின் பங்கு மாற்று பிரதிநிதி, இண்டகிரேடட் எண்டர்பிரைசஸ் [இந்தியா] லிமிடெட், கென்சஸ் டவர்ஸ், 2வது மாடி, 1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017 என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

Publication : Makkal Kural
Date of Release : 24.07.2015

**Sundram Fasteners Limited**

CIN : L35999TN1962PLC004943
Registered office: 98-A, VII Floor, Dr Radhakrishnan Salai, Mylapore, Chennai - 600 004
Tel: +91 - 44 - 28478500 | Fax: 91 - 44 - 28478510 | Email: investorshelpdesk@sfl.co.in | Website: www.sundram.com

# NOTICE OF THE FIFTY SECOND ANNUAL GENERAL MEETING, E-VOTING AND BOOK CLOSURE DATES

The 52nd Annual General Meeting (AGM) of the shareholders of the Company is scheduled to be held on **Friday, the 21st August, 2015 at 10.00 A.M. at the Music Academy - T T Krishnamachari Auditorium (Main Hall), New No.168, TTK Road, Royapettah, Chennai – 600 014.**

Electronic copies of Notice of AGM, Annual Report along with Attendance Slip and Proxy Form have been sent to members whose e-mail IDs are already registered with the Company or the Depository Participant(s), unless the members have registered their request for a hard copy of the same. Physical copy of the same has been sent to all those members in the permitted mode, who have not registered their e-mail IDs with the Company or Depository Participant(s). The Notice of the AGM has been sent to all the Members whose names appear on the Register of Members / Register of Beneficial Owners maintained by the Depositories as at the close of business hours on Friday, the 10th July, 2015.

The Notice of 52nd AGM and Annual Report are also available on the Company's website, viz., www.sundram.com. Members who do not receive the Notice of AGM and Annual Report, may download it from the Company's website or may request for a copy of the same by writing to the Chief Financial Officer & Company Secretary at the above mentioned email ID or Registered Office address of the Company. The documents pertaining to all the items of business to be transacted in the said AGM are open for inspection at the Registered Office of the Company during business hours on any working day upto and including the date of AGM.

The Company is providing the facility to its members holding shares either in physical form or dematerialized form, as on the cut-off date, for casting their votes electronically on each item as set forth in the Notice of AGM through the electronic voting system on National Securities Depository Limited (NSDL) from a place other than the venue of AGM ('remote e-voting') as stipulated under Section 108 of the Companies Act, 2013, Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014 and Clause 35B of the Listing Agreement. The ordinary and special business as set out in the Notice of AGM may be transacted through voting by electronic means.

Members may note the following information:-

| | |
|---|---|
| Date of completion of dispatch of notice of AGM and Annual Report | Thursday, the 23rd July, 2015 |
| The cut-off date for determining the eligibility to vote through electronic means / voting at the AGM | Friday, the 14th August, 2015 |
| The remote e-voting shall commence on | Tuesday, the 18th August, 2015, 9.00 am (Indian Standard Time) |
| The remote e-voting shall end on | Thursday, the 20th August, 2015, 5.00 pm (Indian Standard Time) |
| The remote e-voting shall not be allowed beyond | Thursday, the 20th August, 2015, 5.00 pm (Indian Standard Time) |

Any person, who acquires shares of the Company and becomes member of the Company after dispatch of the notice and holding shares as of the cut-off date i.e. **14th August, 2015** may obtain the login ID and password by sending an email to srirams@integratedindia.in and evoting@nsdl.co.in by mentioning their Folio No./DP ID and Client ID No. However, if the member is already registered with NSDL for remote e-voting, then the existing User ID and password can be used for casting the vote.

The facility for voting through ballot paper shall be made available at the venue of AGM and the members attending the meeting, who have not cast their votes by remote e-voting, shall also be eligible to exercise their right to cast their vote at the meeting through ballot paper.

The Company has appointed Sri K Sriram, Practising Company Secretary as Scrutinizer for the remote e-voting process.

The members who have cast their vote by remote e-voting prior to the AGM may also attend the AGM but shall not be entitled to cast their vote again in the meeting.

A person whose name is recorded in the register of members or in the register of beneficial owners maintained by the depositories as on the cut-off date i.e., **14th August, 2015** only, shall be entitled to avail the facility of remote e-voting / voting at the AGM.

In case of any queries related to remote e-voting, the member may refer the frequently asked questions (FAQs) for shareholders and remote e-voting user manual for shareholders available at the download section of www.evoting.nsdl.com [or] contact Mr Rajiv Ranjan, Assistant Manager, NSDL, 4th Floor, 'A' - Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai – 400 013, E-mail: rajivr@nsdl.co.in, toll free no.1800-222-990, Phone No +91-22-2499 4200 / 2499 4738 [or] the Chief Financial Officer & Company Secretary at the contact details mentioned above.

Pursuant to Section 91 of the Companies Act, 2013, the Register of Members and the Share Transfer Books of the Company will remain closed from Thursday, the 13th August, 2015 to Friday, the 21st August, 2015 (both days inclusive) for the purpose of AGM of the Company.

For SUNDRAM FASTENERS LIMITED

Chennai
**V G Jaganathan**

24th July, 2015
Chief Financial Officer & Company Secretary

**Note: A member entitled to attend and vote at the meeting is entitled to appoint Proxies to attend and vote instead of himself and the Proxy or Proxies so appointed need not be a member or members, as the case may be, of the Company. A person shall not act as a Proxy for more than 50 members and holding in aggregate not more than ten percent of the total voting share capital of the Company. However, a single person may act as a Proxy for a member holding more than ten percent of the total voting share capital of the Company provided that such person shall not act as a Proxy for any other person or shareholder. The instrument appointing the Proxy and the power of attorney or other authority, if any, under which it is signed or a notarized certified copy of that power of attorney or other authority shall be deposited at the registered office of the Company or at the Company's Share Transfer Agents viz. Integrated Enterprises (India) Limited, Kences Towers, 2nd Floor, No.1, Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai - 600 017 at least 48 hours before the commencement of the meeting.**

Publication : Business Standard (All)
Date of Release : 24.07.2015